**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 99/2004**

Deposition of **DW.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 02.02.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : சிவசுப்ரமணியன் Father's Name : பொன்னுசாமி கவுண்டர்

துவக்க நேரம்: 01.12 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வாதியின் நிலத்திற்கும், எனது நிலத்திற்கும் கிழக்கில் வண்டிப்பாதை அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது நிலம் தென்புறத்திலும், வாதியின் நிலம் வடபுறமும் என்றால் சரியல்ல. எங்களது இருவர் நிலத்திற்கும் இடையில் கல்கட்டு அமைந்துள்ளது என்றால் சரியல்ல, எனது நிலத்தில்தான் கல்கட்டு அமைந்துள்ளது. தற்பொழுதும் அந்த கல்கட்டு வரப்பு உள்ளது என்றால் சரிதான்.

2. எனது பெரியப்பா பெயர் மெய்யப்பகவுண்டர் என்றால் சரிதான். எனது பெரியப்பா ஒரு சின்னம்மாள் என்பவருக்கு கடந்த 11.01.1943-ல் குதவை பத்திரம்(வா.த.சா.ஆ.6) எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி குதவை பத்திரத்தில் சிவகாமு அம்மாள் நிலத்திற்கு தெற்கு என்றும், எனது தகப்பனார் பொன்னுசாமி நிலத்திற்கும் மேற்கு என்றும் ச.எண்.400/8-ல் உள்ள 6 செண்ட் நிலத்தில் உள்ள கிணற்றில் 4-ல் ஒரு பாகம் என குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் எனது தகப்பனார் பொன்னுசாமிக்கு கடந்த 18.11.1955 அன்று ஒரு குதவை பத்திரம் (வா.த.சா.ஆ. ) எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்திலும் சிவகாமு அம்மாள்

நிலத்திற்கு தெற்கு என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் பொன்னுசாமி நிலத்திற்கும் மேற்கு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ச.எண்.400/8-ல் உள்ள 6 செண்ட் நிலத்தில் உள்ள கிணற்றில் 4-ல் ஒரு பாகம் தென்புற கவளையில் ஒன்றில் பாதியும் என குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. கடந்த 11.10.1993-ல் எனது அப்பாவிற்கு, எனது பெரியப்பா மெய்யப்பகவுண்டர் பாகபாத்திய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் இரண்டில் ஒரு பங்கில் பொதுவில் பாதி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் தாய் பத்திரத்தில் மூன்றில் ஒரு பங்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு மூன்றில் ஒரு பாகம் என குறிப்பிட்டுள்ள ஆவணத்தை ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும் எனது தகப்பனாருக்கும், பெரியப்பாவிற்கும் தலா நான்கில் ஒரு பாகம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

4. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். நிலஅளவையர்மூலம் அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிக்கை மற்றும் வரைபடம் பார்த்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. மேற்படி அறிக்கையில் தென்புறம் பிரதிவாதி நிலமும், வடபுறம் வாதியின் நிலம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி விவரங்கள் எனக்கு தெரிந்திருந்தும் தற்பொழுது வழக்கிற்காக தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. நான் சிறுவயதிலிருந்தே விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். வரப்பில் ஆடு, மாடுகள் மேய்ப்பேன் என்றால் சரிதான். கடந்த 45 ஆண்டுகளாக தாவா

சொத்தின் அமைப்புகள் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் சிறுவயதில் பார்த்தபொழுது இருந்த நிலையில்தான் தற்பொழுதும் தாவா சொத்து உள்ளது என்றால் சரியல்ல, எங்களது வரப்பை பிரதிவாதிகள் அழித்துவிட்டார்கள். நான் சொல்வது தவறு என்றாலும் கடந்த 13.03.2004 அன்று எனது தகப்பனார் வேறு சில ஆட்களுடன் சேர்ந்துகொண்டு வாதிகளின் வரப்பை அழித்ததால்தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல, வாதிகள்தான் அவ்வாறு செய்தார்கள்.

6. எங்களது குடும்பம் ஊரில் படைபலம் உள்ள குடும்பம் என்றாலும் அதனால்தான் வாதிகளின் நிலத்தை அபகரிக்க முயற்சிசெய்தோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது கடந்த 1933-ம் ஆண்டிலிருந்து வாதிகளும், நாங்களும் நிலஅளவையர் அறிக்கை, வரைபடத்தில் கண்டவாறு அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும் நிலஅளவையர் வரைபடத்தில கண்டவாறு தாவா சொத்தின் அமைப்பு உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக தற்பொழுது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் கூறியதன்பேரில்தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்ட இடையீட்டு மனுக்களின் எண்கள் கூறமுடியுமா என்றால் கூறமுடியாது. அதில் கண்டுள்ள இடையீட்டு மனுக்களின் சங்கதிகள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். தாவாவை திருத்தம் செய்ய தாக்கல் செய்த மனுவின் உத்தரவின்பேரில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8. 1-ம் பிரதிவாதியான எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பதிலுரையில் எனது தகப்பனார் நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்த பின்னிட்டு கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது

தகப்பனார் தாக்கல் செய்த கூடுதல் பதிலுரையில் தாவா சொத்திற்கு தென்புறம் எனது நிலம் இருப்பதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். மேலும் வாதி தாவா சொத்தை அத்துடன் அனுபவம் செய்து வருவது உண்மை என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். மேலும் நீதிமன்ற ஆணையர் அறிக்கையிலும் தனது பதிலுரையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான்.

9. வாதிகள் எங்களது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறியுள்ள நிலையில் அவ்வாறு எந்த ஆண்டுகள் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்றால் கடந்த 2004ம் ஆண்டுக்கு முன்பே அவர்களது நிலத்தை விற்க முற்பட்டபோது யாரும் வாங்க முன்வரவில்லை என்பதால் எங்களது நிலத்தையும் சேர்த்து ஆக்கிரமிப்பு செய்து கொண்டார்கள். நான் சொல்வது தவறு என்றாலும் கடந்த 1933-ம் ஆண்டிலிருந்து தாவா சொத்தை வாதிகள் முன்னோர்கள் அனுபவித்து வந்தார்களோ அதேபோல்தான் தற்பொழுதுவரை அனுபவித்து வந்தார்கள். கடந்த 1933-ம் ஆணடுக்கு முன்னர் பெரியண்ணகவுண்டர் அனுபவம் செய்து அதன் பின்னிட்டு எனது தந்தையும், நானும் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறோம். நான் அனுபவம் செய்து வரும்போதுதான் வாதிகள் ஆக்கிரமிப்பு செய்துகொண்டார்கள்.

10. வாதிகள் எங்களது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று கூறியுள்ள நிலையில் அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியை மீட்டுதரக்கோரி பரிகாரம் கேட்டுள்ளளேனா என்றால் இல்லை. அவர்கள்தான் வாதிகளின் நிலத்தில் நாங்கள் அத்துமீறி நுழைந்ததாக வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள். கடந்த 100 ஆண்டுகளாக வாதி தரப்பினர்கள்தான் நிலஅளவையர் வரைபடத்தில் கண்டவாறு தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. வா.த.சா.2-ஆன சுப்ரமணி என்பவர் நிலம் தாவா சொத்தின் வடபுறம் உள்ளது என்றால் சரிதான். வா.த.சா.3-ஆன கிருஷ்ணராஜ் என்பவர் நிலம் தாவா சொத்திற்கு கிழ புறம் உள்ளது என்றால் சரிதான்.

11. தாவா சொத்தில் உள்ள கிணற்றிற்கு தென்புறம் எனக்கு சொந்தமான தென்னை மரங்கள் இருந்தது என்றால் சரிதான். அதேபோல் வாதிகளுக்கு வடபுறத்தில் தென்னை மரம் இருந்தது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டபோது எனது நிலத்தில் மரவள்ளி கிழங்குகள் பயிரிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிணற்றில் உள்ள கவளை வாரியில் தென்புறம் எங்களுக்கும், வடபுறம் வாதிகளுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பொது கிணற்றிலிருந்து வரும் பொது வாய்க்காலில் தென்புறம் எங்களுக்கும், வடபுறம் வாதிகளுக்கும் பிரிந்து செல்கிறது என்றால் சரிதான்.

12. எவ்வாறு கிணற்றில் பாதி பாகம் உள்ளதோ, அதேபோன்று நிலத்திலும் வாதிகளுக்கு பாதி பாகம் உள்ளது என்றாலும் அதன்படிதான் வாதிகள் நிலத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான்தான் வாதிகளின் அனுபவத்திற்கு இடையீறு செய்து விட்டு தற்பொழுது பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீண்டகால அனுபவத்தின் அடிப்படையில் தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவானது செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 02.00 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/-D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.99/2004, Dt.02.02.2026.